**சார்பு நீதிமன்றம், உசிலம்பட்டி**
**முன்னிலை: திரு. பி.எஸ். ரஸ்கின் ராஜ், பி.ஏ., எல்.எல்.பி.,**
**சார்பு நீதிபதி, உசிலம்பட்டி**

**2026–ம் ஆண்டு மார்ச் மாதம் 02–ம் நாள் திங்கட்கிழமை**

**ஐ.எ.எண்.05/2025 மற்றும் ஐ.எ.எண்.06/2025**
**இன்**
**ஓ.எஸ்.எண்.132/2020 (CNR No.TNMD240001602020)**

1) M. கருப்பாயி
2) P. மொக்கராஜ்
3) M. மீனா
4) P. மாரிமுத்து ... மனுதாரர்கள்/பிரதிவாதிகள்

// எதிராக //

1) M. தெய்வேந்திரன்
2) சிலோன்மணி
3) தேவி
4) பரமேஸ்வரி
5) M.சேனாதிபதி ... எதிர்மனுதாரர்கள்/வாதிகள்

இம்மனுக்களானது, என் முன்பாக கடந்த 24.02.2026–ம் தேதி, இறுதி விசாரணைக்காக வந்தபொழுது, மனுதாரர்களுக்காக கற்றறிந்த வழக்குரைஞர் திரு.வி.ராஜேந்திரக்குமார் அவர்கள் ஆஜராகியும், எதிர்மனுதாரர்களுக்காக கற்றறிந்த வழக்குரைஞர் திரு.எஸ்.தமிழ்ராஜ்

அவர்கள் ஆஜராகியும், இரு தரப்பு வாதங்கள் கேட்கப்பட்டும், மனு, எதிருரை மற்றும் இதர ஆவணங்கள் படித்து பார்க்கப்பட்டும், இது நாள் வரை, இந்நீதிமன்ற பரிசீலனையில் இருந்து வந்து, இன்று இந்நீதிமன்றம் பிறப்புவிக்கும்,

<u>பொ து வா ன உ த் த ர வு :–</u>

மனுதாரர்களால், இம்மனுவானது, தாவா வழக்கில் தாக்கல் செய்துள்ள, எதிரிடை கோரிக்கையை அனுமதிக்கும் பட்சத்தில் அதற்குரிய நீதிமன்றக்கட்டணம் ரூ.12,983/–ஐ தமிழ்நாடு நீதிமன்ற சட்டப்பிரிவு 25(a), (c)–ன் கீழ் செலுத்த உத்தரவிடக்கோரி, பிரிவு 149 உ/இ 151 ஆப் சி.பி.சி–ன் கீழும், தாவா வழக்கில் வாதிகள் தாக்கல் செய்யப்பட்ட திருத்தப்பட்ட வழக்குரைக்கு கூடுதல் எழுத்துப்பூர்வ அறிக்கை தாக்கல் செய்வதற்கு அனுமதி வழங்கக் கோரி கட்டளை 7, விதி 9 மற்றும் பிரிவு 151–ன் கீழும் தாக்கல் செய்யப்பட்டுள்ள மனுக்களாகும்.

<u>2) ஐ.எ.எண்.05/2025–ன் மனுச்சுருக்கம்:–</u>

மனுதாரர்கள் அசல் வழக்கில் பிரதிவாதிகள் ஆவார்கள். தாவா அசல் வழக்கு எதிர்மனுதாரர்கள் / வாதிகளால் வழக்கிடைச் சொத்தில் விளம்புகை மற்றும் நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி தாக்கல் செய்யப்பட்டு இருக்கிறது. வழக்கு விசாரணை நிலுவையில் இருக்கும் பொழுது, எதிர்மனுதாரர்கள் / வாதிகள் வழக்கிடை சொத்து அனுபவ மீட்டடைவு கோரி பிராதை திருத்தம் செய்துள்ளார்கள். மனுதாரர்கள் / பிரதிவாதிகள் தரப்பில் கூடுதல் எதிர்வழக்குரை தாக்கல் செய்யப்பட்டுள்ளது. அனுபவ மீட்டடைவு கோரியுள்ள 85–செண்டுக்கு,

ஒரு செண்டுக்கு ரூ.5,000/- என மதிப்பீடு செய்து, மொத்தம் ரூ.4,25,000/-க்கு ரூ.12,780/- நீதிமன்ற கட்டணம் செலுத்த உள்ளார்கள். இத்தகைய சூழ்நிலையில், மனுதாரர்கள் / பிரதிவாதிகள் தாக்கல் செய்த எதிர்வழக்குரையுடன் கூடுதலாக, எதிரிடை கோரிக்கை கோர வேண்டியுள்ளது. மேற்படி எதிரிடை கோரிக்கையை அனுமதித்தால் ஒன்றுக்கும் மேற்பட்ட வழக்குகள் உருவாவதை தடுக்க முடியும். மேற்படி எதிரிடை கோரிக்கையை அனுமதிக்கும் பட்சத்தில் அதற்குரிய நீதிமன்றக்கட்டணம் ரூ.12,780/-ஐ தமிழ்நாடு நீதிமன்ற சட்டப்பிரிவு 25(a), (b), (c)-ன் கீழ் செலுத்த தயாராக உள்ளதாக மனுதாரர்களால் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**3) ஐ.எ.எண்.05/2025-ன் மனுச்சுருக்கம்:-**

மனுதாரர்கள் அசல் வழக்கில் பிரதிவாதிகள் ஆவார்கள். எதிர்மனுதாரர்கள் / வாதிகள் வழக்கு சொத்துக்கள் தங்களுக்கு உரிமைப்பட்டது என விளம்புகை மற்றும் நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரங்கள் கோரி வழக்கு தாக்கல் செய்துள்ளார்கள். சர்வே எண். 251 / 7-ல் கண்ட ஒரு ஏக்கர் 63-செண்டில், 85-செண்ட் வாதிகள் தங்களுக்கு பாத்தியப்பட்டதாக தெரிவித்துள்ளார்கள். மீதமுள்ள 85-செண்ட் வாதிகளுக்கு பாத்தியப்பட்டதல்ல. மேற்படி, சொத்து சம்பந்தமாக, வருவாய் ஆவணங்கள் பழைய மற்றும் புதிய Settlement Registers-களை பார்வையிட்ட பொழுது, சர்வே எண். 251 / 7-ல் கண்ட 2-ஏக்கர், 55-செண்டும் பிரதிவாதிகளின் முன்னோர்களான இளையபெருமாள் தேவர் பெயரில் உள்ளது. மனுதாரர்கள் / பிரதிவாதிகள் ஏற்கனவே, தாக்கல் செய்துள்ள எதிர்வழக்குரையில்

மேற்படி, 2–ஏக்கர், 55– செண்டும் மனுதாரர்கள் / பிரதிவாதிகளுக்கு பாத்தியப்பட்டது என தெரிவித்திருக்கிறார்கள். தற்பொழுது, மேற்படி சர்வே எண். 251 /7–ல் 87–செண்டை வாதிகள் அனுபவித்து வருகிறார்கள். எனவே, மேற்படி சொத்தின் அனுபவ மீட்டடைவு கேட்டு, மனுதாரர்கள் / பிரதிவாதிகள் எதிரிடை கோரிக்கை வைத்துள்ளார்கள். இந்த எதிரிடை கோரிக்கையை அனுமதிக்காமல் போனால், மனுதாரர்கள் / பிரதிவாதிகளுக்கு பெருத்த இழப்பு ஏற்படும். எனவே, மனுவை அனுமதிக்க கோரி மனுதாரர்களால் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**4) ஐந்தாம் எதிர்மனுதாரர் / ஐந்தாம் வாதி தரப்பில் தாக்கல் செய்துள்ள பொதுவான எதிருரைச்சுருக்கம்:–**

தாவா வழக்கானது, இருதரப்பு வழக்கு விசாரணை முடிந்து, இறுதி வாதத்திற்காக நிலுவையில் உள்ளது. தற்பொழுது, எதிரிடை கோரிக்கை வைத்திருப்பது நிலைக்கத்தக்கதல்ல. மேற்படி, சொத்து பிரதிவாதிகளுக்கு உரிமைப்பட்டது என விளம்புகை பரிகாரம் கோருவதற்கு மூன்று வருடங்களுக்குள்ளாக வழக்கு தாக்கல் செய்திருக்க வேண்டும். தற்பொழுது, மூன்று வருடங்கள் கழித்து இந்த மனுவை தாக்கல் செய்திருப்பதால் வாதிகள் கேட்கும் பரிகாரம் காலவரம்பு சட்டத்தினால் பாதிப்படைந்துள்ளது. மனுதாரர்கள் / பிரதிவாதிகள் கடந்த 08.02.2021–ல் எதிர் வழக்குரை தாக்கல் செய்துவிட்டு, 4 1/2–வருடங்கள் கழித்து 22.09.2025–அன்று இம்மனுவை தாக்கல் செய்திருக்கிறார்கள். எனவே, இம்மனுக்களை அனுமதிக்கக்கூடாது என எதிர்மனுதாரர்கள் தரப்பில் எதிருடை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**5) தீர்மானிக்கப்படவேண்டிய பிரச்சனை:–**

மனுதாரர்கள் தாக்கல் செய்திருக்கும் இம்மனுவானது, அனுமதிக்கப்பட வேண்டிய ஒன்றா? அல்லது இல்லையா?

**6) பிரச்சனைக்குரிய தீர்வு :–**

மனுதாரர்கள் தாக்கல் செய்திருக்கும் இம்மனுவானது, அனுமதிக்கப்படவேண்டிய ஒன்றா ? என்பது குறித்து பார்க்கும்பொழுது, மனுதாரர்கள் / பிரதிவாதிகள் கோரும் பரிகாரமானது, காலவரம்பு சட்டத்தினால் பாதிப்படைந்துள்ளதா? என்பதை வழக்கு விசாரணையின் போது தான் தீர்மானிக்க முடியும். தற்பொழுது, சர்வே எண்.251 / 7–ல் கட்டுப்பட்ட சொத்திற்கு மனுதாரர்கள் / பிரதிவாதிகளின் முன்னோர்கள் பெயரில் உள்ள வருவாய் ஆவணங்களை தாக்கல் செய்திருக்கிறார்கள். எதிர்மனுதாரர்கள் / வாதிகள் வழக்குரையை திருத்தம் செய்திருக்கிறார்கள். மேலும், ஒன்றுக்கும் மேற்பட்ட வழக்குகள் உருவாவதை தடுப்பதற்காக இம்மனுவை அனுமதிப்பது நீதியின்பால் உகந்ததாக இருக்கும் என கருதி, இம்மனு அனுமதிக்கத்தக்கது என தீர்மானிக்கப்படுகிறது.

இறுதியாக, இவ்விரு மனுக்களும், அனுமதித்து உத்தரவிடப்படுகிறது. இம்மனுவின் தன்மை மற்றும் சூழ்நிலையை கருத்தில்கொண்டு செலவுத்தொகை ஏதுமில்லை.

இந்த இரு உத்தரவுகளானது, என்னால் சுருக்கெழுத்து – தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, பின் என்னால் படித்து பார்த்து, பிழைநீக்கம் செய்யப்பட்டு

இன்று 2026-ம் ஆண்டு, மார்ச் மாதம் 02-ம் நாள் திறந்த இந்நீதிமன்றத்தில் அவையறியப்பகரப்பட்டது.

P S RUSKIN RAJ Digitally signed by P S RUSKIN RAJ Date: 2026.03.02 16:59:39 +0530

சார்பு நீதிபதி,
உசிலம்பட்டி.

**இரு தரப்பிலும் எவ்விதமான சாட்சியமும் முன்னிறுத்தப்படவில்லை.**

P S RUSKIN RAJ Digitally signed by P S RUSKIN RAJ Date: 2026.03.02 16:59:45 +0530

சார்பு நீதிபதி,
உசிலம்பட்டி.

இணைப்பு:-

1. Citation memo filed by Petitioners / Defendants

2. Written arguments filed on behalf of the Petitioners / Defendants